# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2019 – 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர் நெட்டெழுத்துகள்

அ ) 5 ☐ ஆ ) 12 ☐

இ ) 7 ☐ ஈ ) 18 ☐

2. பூநகரியும் கந்தரோடையும் பண்டைத்தமிழரின் தலைநகரங்கள். இச் சொல்லியம்

அ ) கூற்று ☐ ஆ ) ஏவல் ☐

இ ) வினா ☐ ஈ ) மெய்ப்பாடு ☐

3. அறிவுக்குப் பகை

அ ) சினம் ☐ ஆ ) குணம் ☐

இ ) பணம் ☐ ஈ ) மனம் ☐

4. மாண்பு என்ற சொல் குறிப்பது

அ ) சிறுமையை ☐ ஆ ) பெருமையை ☐

இ ) தீமையை ☐ ஈ ) நன்மையை ☐

5. கயிலைவன்னியனது ஆட்சிக்காலம்

அ ) 44 ☐ ஆ ) 22 ☐

இ ) 34 ☐ ஈ ) 24 ☐

6. பெயரெச்சத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) வா ☐ ஆ ) வந்து ☐

இ ) வந்தான் ☐ ஈ ) வந்த ☐

7. தீயன செய்தோர் துன்புறுவர் என்ற கருத்தை வெளிப்படுத்தும் பழமொழி

அ ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ☐

ஆ ) அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை. ☐

இ ) அடாது செய்பவர் படாது படுவர். ☐

ஈ ) இரக்கப் போனாலும் சிறக்கப் போ ! ☐

8. ஆசிரியர் செய்யுட்பொருளைத் தெளிவாக விளக்கினார். இதில் இடம்பெற்ற செயப்படுபொருள்

அ ) விளக்கினார் ☐ ஆ ) செய்யுட்பொருளை ☐

இ ) தெளிவாக ☐ ஈ ) ஆசிரியர் ☐

9. கயிலைவன்னியனுக்கு அஞ்சி போர்த்துக்கேயரால் பைல் என்னும் கோட்டை அமைக்கப்பட்ட இடம்

அ ) ஆனையிறவு ☐ ஆ ) யாழ்ப்பாணம் ☐

இ ) வெற்றிலைக்கேணி ☐ ஈ ) பூநகரி ☐

10. நிலநடுக்கத்தினால் கட்டிடங்கள் ____________ என ஆடின.

அ ) கிடுகிடு ☐ ஆ ) கடகட ☐

இ ) படபட ☐ ஈ ) குடுகுடு ☐

11. மக்கள் திடுநேர்கை நிகழ்ந்துவிட்டதென அவலக் ________ எழுப்பினர்.

அ ) குறள் ☐ ஆ ) குரள் ☐

இ ) குறல் ☐ ஈ ) குரல் ☐

12. சினங்கொண்ட குரங்குகள் இளநீரைப் பிடுங்கி ________ எறிகின்றன.

அ ) புலவருக்கு ☐ ஆ ) வாளைமீனுக்கு ☐

இ ) உழவருக்கு ☐ ஈ ) எருமைக்கு ☐

13. பெண் மானைக் குறிக்கும் சொல்

அ ) மறி ☐ ஆ ) பிணை ☐

இ ) வேழம் ☐ ஈ ) கடா ☐

14. தோமசு வான்றி ———— நாட்டு ஆளுநர்.

அ ) ஒல்லாந்து ☐ ஆ ) போர்த்துக்கேய ☐

இ ) பிரித்தானிய ☐ ஈ ) பிரான்சு ☐

15. நீங்கள் + ஐ என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) எங்களை ☐ ஆ ) தங்களை ☐

இ ) உங்களை ☐ ஈ ) நீங்களை ☐

16. மலையும் மலை சார்ந்த இடமும்

அ ) முல்லை ☐ ஆ ) மருதம் ☐

இ ) நெய்தல் ☐ ஈ ) குறிஞ்சி ☐

17. மஞ்சட்பொடி பூசி கதிரவனை நோக்கி நிற்கும் மலர்

அ ) தாமரை ☐ ஆ ) அல்லி ☐

இ ) சூரியகாந்தி ☐ ஈ ) மல்லிகை ☐

18. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகரம்

அ ) பூநகரி ☐ ஆ ) பொன்பரிப்பு ☐

இ ) நாகதீபம் ☐ ஈ ) கந்தரோடை ☐

19. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) வானம் ☐ ஆ ) முகில் ☐

இ ) மண் ☐ ஈ ) நிலா ☐

20. ஒரு பொருளின் பண்பையோ, தன்மையையோ சிறப்பித்துக் கூறுவது

அ ) எழுவாய் ☐ ஆ ) பயனிலை ☐

இ ) அடைமொழி ☐ ஈ ) செயப்படுபொருள் ☐

21. ஈழத்தமிழர் வரலாற்றில் கயிலைவன்னியன் ஆட்சிக்காலம் ________ இல்லாத பொற்காலமாகும்.

அ ) கண்ணுங் கருத்தும் ☐ ஆ ) அல்லும்பகலும் ☐

இ ) கங்குகரை ☐ ஈ ) ஈடுஇணை ☐

22. தமிழர் கலைகளை ________ ஆக வகுத்துள்ளனர்.

அ ) 34 ☐ ஆ ) 30 ☐

இ ) 24 ☐ ஈ ) 64 ☐

23. குழந்தை தாயின் மடியில் விழிகளை மூடி

அ ) உறங்கியது ☐ ஆ ) உறங்கின ☐

இ ) உறங்கினர் ☐ ஈ ) உறங்கினார் ☐

24. அஃறிணைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) பறந்தது ☐ ஆ ) அளவளாவினோம் ☐

இ ) வந்தான் ☐ ஈ ) சிரித்தீர்கள் ☐

25. அதி தொலைவிலிருந்து சேரமன்னனைக் காண வந்த புலவர்

அ ) கபிலர் ☐ ஆ ) ஔவையார் ☐

இ ) மோசிகீரனார் ☐ ஈ ) பாவேந்தர் ☐

26. எழுந்தான் என்பது

அ ) பன்மை ☐ ஆ ) முன்னிலை ☐

இ ) தன்மை ☐ ஈ ) ஒருமை ☐

27. வேரில் பழுக்கும் பழம்

அ ) மாம்பழம் ☐ ஆ ) வாழைப்பழம் ☐

இ ) திராட்சைப்பழம் ☐ ஈ ) பலாப்பழம் ☐

28. முக்கோணம் என்பது

அ ) இடப்பெயர் ☐ ஆ ) குணப்பெயர் ☐

இ ) சினைப்பெயர் ☐ ஈ ) காலப்பெயர் ☐

29. செவி வழியாக மட்டும் உள்ளத்தைக் களிப்பூட்டும் கலை

அ ) சிற்பம் ☐ ஆ ) நடனம் ☐

இ ) இசை ☐ ஈ ) ஓவியம் ☐

30. துளைகளால் இசையெழுப்பும் இசைக்கருவி

அ ) யாழ் ☐ ஆ ) புல்லாங்குழல் ☐

இ ) தாளம் ☐ ஈ ) மத்தளம் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. இதை இயற்றியவர் சீத்தலைச்சாத்தனார். சிலப்பதிகாரம் இல்லறத்தையும் மணிமேகலை துறவறத்தையும் கூறுகின்றன. இந்நூல்களை இரட்டைக்காப்பியங்கள் என்பர். பசித்தோர்க்கு உணவளிக்க வேண்டும் என்னும் நல்லறத்தை பண்டைய நூல்கள் வலியுறுத்துகின்றன. மணிமேகலையும் இதையே வலியுறுத்துகின்றது. பசித்த உயிர்களுக்கு உணவிட்டுக் காப்பதையே கடமையாகக் கொண்டாள் மணிமேகலை. அதனால் தன் ஆயுள் முழுவதும் இந்த அறத்தையே ஆற்றிவந்தாள். ‘‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பர் சான்றோர்’’ உணவு கொடுப்போரே உயிர் கொடுத்தவர் ஆவர் என்பது இதன் பொருளாகும். உணவால்தான் ஒருவர் உயிர் வாழ முடியும். உணவு இன்றேல் உயிர் வாழ முடியாது. எனவே, நாம் எம்மால் முடிந்தளவு பிறரின் பசியைப் போக்குவோம்.

1. இரட்டைக் காப்பியங்கள் எவை?

_______________________________________________

2. பண்டைய நூல்கள் எதை வலியுறுத்துகின்றன?

_______________________________________________

_______________________________________________

3. பசித்த உயிர்களுக்கு உணவிட்டுக் காப்பதையே கடமையாகக் கொண்டவர் யார்?

_______________________________________________

_______________________________________________

4. நாம் எம்மால் முடிந்தளவு எதைப் போக்க வேண்டும்?

_______________________________________________

_______________________________________________

5. சிலப்பதிகாரம் எதைக் கூறுகின்றது?

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தொடருந்தை நேரிடரிலிருந்து காப்பாற்ற, மருதுபாண்டியன் கையாண்ட வழி யாது?

_______________________________________________

_______________________________________________

2. சினங்காத்தல் பற்றிக் கூறிய புலவர் இருவரின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

3. கல்மேல் எழுத்துப் போல் என்றும் அழியாமல் நிலைத்து நிற்பது எது எனக் கூறப்படுகின்றது?

_______________________________________________

_______________________________________________

4. அன்னப்புள்ளின் கற்சிலை எங்கே உள்ளது?

_______________________________________________

5. வன்னி பழந்தமிழரது நிலம் என்பதற்குச் சான்றுகள் இரண்டு தருக.

_______________________________________________

_______________________________________________

6. **குறள்:** பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது     இக் குறளின் பொருளை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

7. மாற்றாருக்கு எதிராகப் படைதிரட்டிப் போராடிய வன்னி அரசகுல மகளிரின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## உதவிடுவோம்

| | | |
|---|---|---|
| தண்ணீர் | ஏழை | சிறு |
| இழந்த | கரைந்திட்டால் | |

ஒரு மரமேனும் நாம் நட்டு - எம்
உயிரைப் போலப் பேணிடுவோம்
ஒருவர்க்கு ஏனும் ____________ உதவி - நாம்
உள்ளன்போடு செய்திடுவோம்!

காகம் வந்து ____________ - நாம்
கைபிடிச்சோறு வைத்திடுவோம்!
தாகம் என்று வருவோர்க்கு - நாம்
____________ கொடுத்து மகிழ்ந்திடுவோம்!

உறுப்புகள் ____________ மக்களுக்கு - நாம்
உதவிகள் பல புரிந்திடுவோம்!
துடிக்கும் ____________ துயர் துடைக்க - நாம்
தூங்காது பணி செய்திடுவோம்!

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. எதிர்கால இடைநிலைகள் எவை? ______________________

அவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________ ______________________

2. செயப்படுபொருள் இடம்பெறுமாறு இரண்டு சொல்லியங்கள் எழுதுக.

______________________________________________

______________________________________________

3. தரப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| தண்ணீர் | ______________ | ஓரிலை | ______________ |
| தடங்கரை | ______________ | தமிழ்க்கவிஞர் | ______________ |
| காற்சங்கிலி | ______________ | செல்லிடம் | ______________ |

4. **காண்** என்ற வினையடியின் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று என்பவற்றைத் தருக.

| | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று |
|---|---|---|---|
| காண் | ______________ | ______________ | ______________ |

5. கீழ்வரும் சொற்களை வைத்து சொல்லியங்கள் எழுதுக.

ஆனி ______________________________________________

ஆணி ______________________________________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அவை தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு போன்றனவாகும். தமிழ் மிகவும் பழமை வாய்ந்த மொழிகளில் ஒன்று. தமிழரின் தாயகம் தமிழீழமும் தமிழகமும் ஆகும். இன்று நாம் எமது தாயகத்தை விட்டு உலகெங்கும் பரந்து வாழ்கின்றோம். அங்கெல்லாம் எமது தாய்மொழி தமிழைக் கற்பதோடு எமது பண்பாட்டையும் பேண வேண்டும். இல்லையெனில், நாம் யார் என்று அடையாளம் தெரியாமல் அழிந்து விடுவோம். எனவே எமது மொழியையும் பண்பாட்டையும் பேணுவோம்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ கயிலைவன்னியன்
- ✸ நீர் ஒரு பறவையானால் ( நீர் என்பது உம்மைக் குறிக்கும் )
- ✸ கோடைகாலமும் கடற்கரைக்காட்சியும்

புள்ளிகள் 20